
# உங்களின் பணம் அல்லது உங்களின் மறுவாழ்வு உரிமை





தயாரிப்பு:

ரீகன்ஸ்ட்ரக்ஷன் ஃபார் டெவலப்மெண்ட் சென்டர்ஸ் (RDC)
A&D, CED, ISED, Praxis மற்றும் TNDTF ஆகியோருடன் கூட்டுதாரராகவும்,
பவுண்டேஷன் தெ பிரான்ஸ் நிதியுதவியுடன் கூடியது

# பொருளடக்கம்

பக்கம்

முன்னுரை ....................................................................1

நிதியை தவறாக பயன்படுத்துவது ..........................................2

நிதியை திசை திருப்புவது....................................................4

நிதியை பயன்படுத்தாத தன்மைகள்........................................6


நிதியளிக்க மறுப்பது ...........................................................8

அரசுத் திட்டங்கள்................................................................12

சுனாமி நிவாரண அரசு-சாரா அமைப்புகளின் நிதி....................14

நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?.....................................16

# முன்னுரை




இந்திய அரசாங்க உச்சமட்ட பொது கணக்காய்வாளர் (CAG) கூற்றுப்படி, 2005-இல் 43% விழுக்காடும், 2006-இல் 19 விழுக்காட்டு நிவாரண நிதியும் சரியான ஆவணங்கள், மறு பரிசீலனைகள் இன்றி செலவழிக்கப்பட்டுள்ளன. மற்றொரு அறிக்கையில், மாநிலங்கள், சுனாமி தொடர்பாக, பெறப்பட்ட நிவாரண மற்றும் புனரமைப்பு நிதியை சுமார் 44.88 கோடி ரூபாய் அளவுக்கு, சுனாமி தொடர்பற்ற செலவீனங்களுக்காக திசை திருப்பப்பட்டுள்ளதாக தெரிவிக்கிறார்.


CAG என்பவர் அரசாங்க செலவுகளை ஆய்வு செய்து, குற்றம் குறைகளை சுட்டிக் காட்டுவார். இதன் பிறகு, இந்த குறைகளை களைந்து, சரியான நடைமுறைகளை செய்ய வேண்டியது அரசாங்க நிர்வாக அதிகாரிகளின் பொறுப்பாகும். CAG அறிக்கைகள் மற்றும் ஆய்வுகள் மீது நிர்வாகிகள் எவ்வித நடவடிக்கையும் எடுக்காத காரணத்தால், பாதிக்கப்பட்ட மக்களான நாம்தான், இந்த முறைகேடுகளைப் பற்றி குரல் எழுப்பி, முறையான முழுமையான நிவாரணம் மற்றும் புனரமைப்பு நடக்கவும், வழிவகை செய்ய முயற்சி மேற்கொண்டு, குறிப்பாக நிதியை தவறாக பயன்படுத்துவதை தடுக்கும் வகையான வழிமுறைகளை வகுக்கப் பாடுபட வேண்டும்.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் நாம் புனரமைப்பின் கடைசி கட்டமான, வளர்ச்சி கட்டத்தை அடைந்து உள்ளோம். (நிவாரணம் மற்றும் மறுசீரமைப்பு முதல் இரண்டு கட்டங்களாகும்). ஏற்கனவே மறுசீரமைப்பு பணி சீர்கெட்ட நிலையில் உள்ளது. இப்போதைய வளர்ச்சி கட்டத்தில், தொடர்பற்ற பணிகளுக்கு நிதியை திசை திருப்பும் ஆபத்து அதிகம்.

"நம்முடைய பணம்" (வரிகள், நிவாரண நிதி, பேரழிவுக்கு பின்னான உடனடி தேவைக்கு திரட்டப்பட்ட பொது நன்கொடைகள் அல்லது நம்மிடமிருந்து பெறப்பட்ட பணம்) எவ்வாறு தவறாக பயன்படுத்தப்பட்டு, திசை திருப்பப்பட்டு, அழிவினால் பாதிக்கப்படவர்களை அடையாமலும், மறுக்கப்பட்டும் உள்ளது என்பதை வெளிச்சமிட்டு காட்டுவதே இந்த கட்டுரையின் நோக்கம்.

இந்த கட்டுரை நாளேடுகள் மற்றும் கடந்த கால அழிவுகளின்போது CAG வெளியிட்ட அறிக்கைகள் மற்றும் செய்திகளை ஆதாரமாக கொள்கிறது; 2004-2005-தில் மகாராஷ்டிரா மாநிலத்தின் வெள்ளப் பெருக்கு, 26 டிசம்பர் 2004 அன்று சுனாமியால் சேதமடைந்த கடலோர மாநிலங்கள், 26 ஜனவரி 2001-இல் நிகழ்ந்த பூஜ் நிலநடுக்கம், 11 அக்டோபர் 1999-இல் ஒரிஸ்ஸா மாநிலத்தில் ஏற்பட்ட மாபெரும் சூறாவளி அழிவு, இது போன்ற பல அழிவுகளின் போதும், பொதுவாக உதவி, நிவாரண நிதிகள் கையாடப்பட்டுள்ளது ஒரு பொது அவலம்.

# தவறாக பயன்படுத்தப்படும் நிதிகள்




இந்திய அரசாங்க உச்சமட்ட பொது கணக்கு ஆய்வாளர் (CAG) [இவர்தான் அரசாங்க கணக்குகளை தணிக்கை செய்யும் முதன்மை ஆய்வாளர்], நிவாரண நிதிகள் முறையான சோதனை, ஆவணம் மற்றும் வழிமுறைகள் இன்றி செலவு செய்யப்படுவதாக, தொடர்ந்து அறிக்கைகளை வெளியிட்டு உள்ளார்.

குஜராத் நிலநடுக்கத்தின்போது, வேளாண்மை நிர்வாக அதிகாரி எவ்வித வழிமுறைகளும் இன்றி, சுமார் 242.9 மில்லியன் ரூபாய் பெருமானமுள்ள வேளாண்மை சாதனங்களை வாங்கியுள்ளார் என்பதை CAG சுட்டிக் காட்டியது (1). சீரான முறையில் சேதமடைந்த வீடுகளை புனரமைக்காததும், தகுதியற்ற, பாதிக்கப்படாத மக்களுக்கு வீட்டு வசதிகளை செய்து கொடுத்ததின் காரணத்தாலும் செலவுகள் அதிகரித்தன. நிலநடுக்கத்தை தாங்கும் வகையில் வீடுகளை அமைத்துக் கொடுக்காததும் குறிப்படப்பட்டது. சட்ட விதிமுறைகளை மீறி 121 தொழில் அலகுகளுக்கு 9.83 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. (CAG அறிக்கை 2001-2002).

CAG அறிக்கையில் கூறியபடி, (2) சுனாமியின்போது, தமிழ்நாட்டில் சுனாமி நிவாரணத்திற்காக ஒதுக்கப்பட்ட 6.38 கோடி ரூபாய்கள், நான்கு மாவட்டங்களில் பதிவு தாள் பெறாத 3330 கட்டுமரங்களுக்கு சட்டத்துக்கு புறம்பாக வழங்கப்பட்டது.

மஹாராஷ்டிரத்தில், 2005, 2006 ஆண்டுகளின் பருவ மழைக்கால வெள்ளங்களின் போது நடைமுறைப்படுத்த வேண்டிய விதிகளை மீறி இறந்தவர்களுக்கு சுமார் 4.39 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளது.

2006 இல், மும்பை வெள்ளத்தின் போது, வெள்ள நிவாரணமாக 1200 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. இதில் சுமார் 700 கோடி ரூபாய் வீண் செலவு செய்யப்பட்டுள்ளது. பயன்பாட்டாளர்கள் பற்றிய எவ்வித அடையாளம் மற்றும் மேற்பார்வை, சோதனை இன்றி சுமார் 35.65 கோடி ரூபாய் நிவாரண உதவி தொகை வழங்கப்பட்டுள்ளது. சரியான அடையாளம், சோதனை மற்றும் தகுதி அற்றவர்களுக்கு, 16.14 கோடி ரூபாய் (3) பணமாகவும், பொருளாகவும், நிவாரண உதவியாக வழங்கப்பட்டுள்ளது.

அதிகார வர்க்கத்தின் எல்லா விதிகளையும் நாம் ஒப்புக்கொள்ள முடியாது என்பது உண்மை என்றாலும், நிதியை தவறாக பயன்படுத்துவது ஒரு விதியாக மாறியுள்ளது என்பது மேற்கண்ட எடுத்துக்காட்டுகளிலிருந்து தெரிய வருகிறது. எப்போதெல்லாம் நிவாரண முயற்சிகளை "ஒன்றிணைக்க" பல்வேறு அரசு, அரசு-சாரா, தனியார் நிறுவனங்களின் செயல்களை இணைக்கும் வாய்ப்பு கிடைத்ததோ, அப்போதெல்லாம் மாவட்ட வட்டாட்சியர் அலுவலக அதிகாரிகள், அரசு-சாரா அமைப்புக்களின் செயல்திறனை கட்டுப்படுத்தும் வகையில், வழிமுறைகள், புரிதல் அறிக்கைகள்,

வெளிப்படையான செயல்பாட்டு விதிகள், மேற்பார்வை குழுக்கள் போன்றவற்றை செய்து வந்துள்ளது. இத்தகு விதிகளை நாம் வரவேற்கின்ற அதே வேளையில், நிவாரணத்துக்கானபெரும் நிதியை வேறு பணிகளுக்கு திசை திருப்பும் விஷயத்தில், இது போன்ற, கட்டுப்பாட்டு விதிகள், குறிப்பாக கணக்கீடு முறை விதிகளை நாம் காண கிடைப்பதில்லை.

அரசு-சாரா அமைப்புகள், தனியார் நிறுவனங்கள், மற்றும் இதர மதம் சார்ந்த, மற்றும் நிறுவனங்களின் செயல்பாடுகளை ஒன்றிணைக்கும் போது, தனியார் முயற்சிகளை கட்டுபடுத்துவதற்க்கு பதிலாக அரசு ஒரு விதமான "அனுமதி வழங்கும் ராஜாங்க" வேலைகளை, வீடு ஒதுக்கீடு செய்யும் பொழுது காண முடிந்தது. அரசு இது போன்ற செயல்களை தவிர்த்து கிராமம் மற்றும் வட்டார அளவில் திறந்த, வெளிப்படையான தகவல் முறைகளை. குறிப்பாக நிவாரணம் கொடுக்கப்பட்டதும், கோரப்பட்டதும் பற்றிய செயல்களை செய்தால் நலமாக இருக்கும். உடனுக்குடன் பயன் பெற்றவர்களின் பெயர் மற்றும் இன்னபிற விவரங்களை வழங்கும் வகையில், முக்கியமாக பெரிய நிவாரண பயன்பாடு மற்றும் வீட்டு மனைகள், படகுகள், உப்பு அகற்றும் பணிமுறைகள் ஆகியவைகளை பட்டியலிட்டு காட்டும் ஒரு கணினி சார்ந்த தகவல் அமைப்பை உருவாக்கலாம். இதன் மூலமாக, வெளிப்படையான தகவல் கிடைப்பதினால், தனியார் உதவி குழுக்கள், ஒரு குறிப்பட்ட பகுதியில் நிவாரண தேவை உள்ளதா, அல்லது தேவை இல்லையா என்பதை அறிந்துகொள்ள முடியும்.


இந்த விதிகள் உருவாக்கும் மற்றொரு பிரச்சினை என்றால் மாநிலத்துக்கு வரக்கூடிய வளங்களை, உள்ளூர் ஆளும் கட்சி சார்ந்த சட்டசபை உறுப்பினர்கள் போன்ற உள்ளூர் தரகர்கள் கட்டுப்படுத்துவது, பல தனியார் அரசு-சாரா அமைப்புகள், இத்தகைய ஆளும் வர்க்கத்தினரால், அவர்களுக்கு சார்புடையவர்களுக்கே நிவாரணம் அளிக்க கட்டாயப்படுத்தப் பட்டுள்ளன என்பது உண்மை.

ஆகவே, உள்ளூர் அரசாண்மை படிவங்களான பஞ்சாயத்துக்கள் மக்கள் பாரம்பரிய மக்கள் சமூக தலைவர்களை ஈடுபடுத்துவதே சரியான முறையாகும். இத்தகு உள்ளூர் அமைப்புகள் குற்றமற்றவை என்று சொல்லமுடியாது.

இந்த அமைப்புகளும், மேட்டுக்குடி வகுப்பினர்களுக்கு சார்பாகவே நடந்துகொள்ளும் பாங்கு உள்ளது. மேலும் சாதி மற்றும் பால் சார்ந்த பாகுபாடுகள் நடைமுறையில் இருப்பதும் உறுதி. இருப்பினும் இத்தகைய உள்ளூர் அமைப்புகளை, பலம் குன்றிய மக்கள் சமூகம் எளிமையாக அணுகமுடியும். மேலும் இத்தகைய அமைப்புகள் அருகில் இருப்பதால், மாற்றங்களை கொண்டுவர இயலும். உள்ளூர் அளவில், இது போன்ற மையப்படுத்தப் படாத அமைப்பு முறைகள் மற்றும் பயன்பாட்டாளர்களை பற்றிய, மற்றும் பல்வேறு திட்டங்களை பற்றிய முன்கூட்டியே அறிவிக்கும் பொதுவான தகவல் பரப்பு முறை ஏற்படின், நிதி தவறாக பயன்படுத்தப்படுவது ஒரு வகையில் சரி செய்யப்பட்டு குறைக்கப்படும்.
ஆகவே, சாதி, பால்-சார்பு, வர்க்கம் மற்றும் இன அடிப்படையில் பாகுபாடு செய்யாத வகையில் விதிகள் வகுக்கப்பட வேண்டும். இதை கீழ்காணும் வகையில் செய்தல் வேண்டும்:

- நிவாரணம் மற்றும் புனரமைப்பில் மக்கள் பங்கேற்கும் வழிவகைகள் செய்தல்.
- வெளிப்படையான செயல்பாட்டுக்கு இடமளித்தல்.
- உடனடி நிவாரணம் மற்றும் நீண்ட கால புனரமைப்புக்கான வழி முறைகள் மையப்படுத்தப் படாமல் இருத்தல்
- உள்ளூர் அளவில் விதிகளை அமைத்து, சொல்லாடல் நடத்துதல்
- தகவல் மையங்களை உருவாக்குதல்
- பேரழிவு-சூழ்நிலையை எதிர் காண சமூகம் சார்ந்த செயல்பாடு.

# நிதியை திசை திருப்புதல்




பேரழிவு சூழலில், பணப் போக்குவரத்தை அதிகரிக்க, அரசு, கையாளும் பொதுவான தந்திரம் என்னவெனில், பண வருவாய் அற்ற "செல்ல" திட்டங்களுக்கு நிவாரண நிதியை திசை திருப்புவது.

"2005, 2006 -ஆம் ஆண்டு மஹாராஷ்டிரா (4) பருவகாலத்தில், வெள்ளத்துக்கு பின்பான நிவாரணம் மற்றும் புனரமைப்பு போன்ற பணிகளுக்காக வெள்ளம் சாராத பணிகளுக்காக சுமார் 1.43 கோடி ரூபாய் திசை திருப்பப்பட்டது" என்று CAG அறிக்கை தெரிவிக்கிறது.

CAG தணிக்கைப்படி, குஜராத் நிலநடுக்கத்தின் போது, 228 தொழில் நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட நிவாரணத் தொகையில், 121 நிறுவனங்களுக்கு வழங்கப்பட்ட உதவி, சட்டத்துக்கு புறம்பாகவும், விதிகளுக்கு முரண் ஆனதாகவும் இருந்ததை CAG தணிக்கையின்போது கண்டறிந்தது. ஏப்ரல் 2001-இல் இயற்றப்பட்ட அரசு ஆணைகளுக்கு புறம்பாக, அரசு முடிவுகளை மீறி, 14 விடுதிகளுக்கு, அலங்கார பொருட்கள், கட்டில், சமையல் சாதனம் போன்ற தகுதியற்ற பொருட்களுக்கு வழங்கியதால் 6.9 மில்லியன் (1) ரூபாய் கூடுதல் செலவீனம் ஏற்பட்டதாக CAG அறிக்கை சுட்டிக்காட்டியது.

புதிய சூறாவளி-தொடர்பற்ற பணிகளுக்காகவும், ஏற்கனவே உள்ள சூறாவளி-தொடர்பற்ற பணிகளின் கடன்களை குறைக்கவும், ஒரிஸ்ஸாவில், 20 பொதுப் பணி துறைகள், மற்றும் அதன் நிர்வாக பொறியியலாளர்கள், சுமார் 12.39 கோடி ரூபாய் பெறுமானம் உள்ள சூறாவளி சேதார சீரமைப்புக்காக ஒதுக்கப்பட்ட தொகையை தொடர்ந்து திசை திருப்பியும், தவறாக பயன்படுத்தியும் உள்ளதாக தெரிகிறது (2000-2001 CAG அறிக்கை). மேலும் ஒரிஸ்ஸா மாநில அரசு, தேவையின்றி, அத்தியாவசிய வளங்களை வீணடிப்பதாகவும், CAG குறிப்பிட்டுள்ளது. கேந்திரபாரா மாவட்டத்தில், 6 லட்சம் பெருமானமுள்ள சாலை சீரமைப்பு பணிகளுக்கு 60 லட்சம் கணக்கு காட்டப்பட்டுள்ளது. உயர் நீதிமன்ற நிதியரசர் பங்களாவை, சீரமைக்க சுமார் 18 லட்சம் ரூபாய் செலவிடப்பட்டது. (5)

தேசிய கலக நிவாரண நிதியிலிருந்து இந்த தொகை பெறப்பட்டது. இதுவரை, 107 கோடி ரூபாய் சூறாவளி நிவாரண நிதியில் சுமார் 29 கோடி ரூபாயை, திவாலான மாநில அரசு, தன்னுடைய அரசு ஊழியர்களுக்கு சம்பளம் கொடுக்க பயன்படுத்தி உள்ளது.

CAG இன் பல அறிக்கைகளுக்கு பிறகும், இத்தகைய திசை திருப்புதல் மூலம் பயனடைந்த மறைக்கப்பட்ட பயனாளர்கள் பற்றி கண்டிபிடிக்க எந்தவித விசாரணையோ, அல்லது புலன் விசாரணையோ நடந்ததை நாம் கேள்விப்படவில்லை. இது ஒரு ஊழல் மட்டுமின்றி, இது பாதிக்கப்பட்டவர்களுக்கு இழைக்கப்படும்

அநீதியாகும். பாதிக்கப் பட்டவர்கள் அமைப்பாக்க படாமலும், பேரழிவு உதவித் தொகையென்னும் பணியாரத்திலிருந்து, சிறிய துண்டுகளை பாதிக்கப்பட்டவர்களுக்கு வீசி எறிந்து, மகிழ்ச்சி தர முயற்சிப்பதாலும், இது போன்ற திசை திருப்பும் மோசடிகள் பார்வைக்கு தென்படாமல் மறைக்கப்படுகின்றன.

"ஏற்கனவே அடைக்க வேண்டிய கடன் மற்றும் நிர்வாக செலவுகளுக்காக" சுமார் 44.88 கோடி ரூபாயை (2) சுனாமி நிவாரணத்திலிருந்து, திசை திருப்பியதற்காக CAG, அரசாங்க நிவாரண அதிகாரிகளை தன்னுடைய அறிக்கையில் வறுத்து எடுத்து உள்ளது.

மாநிலங்கள் 44.88 கோடி ரூபாயை சுனாமி நிவாரணம் மற்றும் புனரமைப்பு ஒதுக்கீட்டிலிருந்து திசை திருப்பியதாக CAG கண்டுபிடித்து உள்ளது.

- ஆந்திர பிரதேசம் 2 கோடியை ஜம்மு காஷ்மீர் நிலநடுக்கத்தில் பாதிக்கப்பட்டவர்களுக்கு நிவாரணமாக அனுப்பியது, மற்றும் அந்தமான், நிகோபார் சுனாமி நிவாரணத்துக்கு 25 லட்சம் அனுப்பியது.
- நிர்வாக செலவுகளுக்காக கேரள மாநிலம் 11.51 கோடி ரூபாயை திசை திருப்பியது.
- சம்பந்தமற்ற பணிகளுக்காக 19.66 கோடி ரூபாயை புதுச்சேரி (6) பயன் படுத்தியது. மேலும் அனுமதி பெறாத மீனவர் உதவி தொகைக்காகவும் 10.07 கோடி ரூபாய் செலவழிக்கப்பட்டது.


சுனாமி நிவாரணத்துக்காக ஒதுக்கப்பட்ட பணத்திலிருந்து, இந்த நிதி ராஜீவ் காந்தி புனரமைப்பு திரட்டிலிருந்து, மீன்வள துறையின் செலவுகளுக்காக 11.41 கோடி ரூபாயை தமிழக அரசு திசை திருப்பியதையும் CAG ஆணையம் கண்டு பிடித்தது. (7)

சுனாமிக்காக ஒதுக்கப்பட்ட நிதியை திசை திருப்பிய விஷயத்தை முன் வைத்து கேரள மாநிலங்களவையில் எதிர்கட்சி வெளிநடப்பு செய்தது. முதல் அமைச்சர் சுனாமி நிவாரண நிதியின் திரண்ட பெருவாரியான நன்கொடைகள், சுனாமியால் பாதிக்கப்படாத பல்வேறு பகுதிகளில் செலவழிக்கப்பட்டது என்று சி.பி.எம். கட்சியை சேர்ந்த டி. கே. தேவகுமார் குற்றம் சாட்டி உள்ளார். "அரூர் மற்றும் சேர்தலா தொகுதிகளில் குடிநீர் குழாய்கள் அமைப்பதற்காக, சுமார் 9 கோடி ரூபாய் சுனாமி நிதியிலிருந்து திசை திருப்பட்டது" என்று குற்றம் சாட்டினார் (8).

மாநிலங்களின் இந்த போக்கை ஏற்றுக்கொள்ள முடியாது. பாதிக்கப்பட்டவர்களின் பேரில் திரட்டப்பட்ட நம்முடைய பணம் அவர்களுக்காக செலவு செய்யப்பட வேண்டும். இதன் இடையே, சுற்றுலா/விடுமுறை சம்பந்தப்பட்ட வணிக சொத்து வளர்ச்சியை அனுமதித்து வரும் அதே வேளை, மீனவர்களை கடலோர பகுதிகளிலிருந்து வெளியேற்ற பலவித விடாமுயற்சிகளை அரசு மேற்கொண்டது.

இப்படியாக வளர்ச்சி மற்றும் நிதியுதவி, உள்ளவர்களுக்கு புதிய வாய்ப்புக்களையும், அதிக நுகர்பொருளையும் வழங்கும் அதே வேளையில், இல்லாதவர்கள் தங்கள் வாழிடங்களிலிருந்து பெயர்க்கப்பட்டு, வீடு, நிலம், வளம் மற்றும் வாழ்வு ஆதாரத்தை இழக்க வழி வகுக்கிறது. சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில், மக்கள் நிலையான மேம்பாட்டுக்கான விவசாய, மீனவ, உள்ளூர் வணிகம் சார்ந்த வாழ்வு ஆதாரங்களை புனரமைக்க அனுமதிக்கப்படுவதே, சரியான நீதி நெறிமுறையாகும். சுனாமி புனரமைப்பு மற்றும் மீட்டெடுப்பு, நம் இயற்கை இயல், பொது மானிடம், மனித தன்மானம் மற்றும் உலக மனித உரிமைகளை எல்லா குடிமக்களுக்கும், குறிப்பாக சுனாமி (9) போன்ற பேரழிவுகளால் பாதிக்கப்பட்டவர்களுக்கு கிடைக்க செய்வது மற்றும் மீட்டுக் கொடுப்பது முக்கியமாகும்.

# நிதியை பயன்படுத்தாமல் இருத்தல்




"சுனாமி நிவாரணம் மற்றும் புனரமைப்பு" என்ற தலைப்பிட்ட தணிக்கை அறிக்கையை 2006-இல், மக்களவை முன்பு CAG வைத்தது. பயன்பாட்டாளர்கள் நிதியை பயன்படுத்தாத காரணத்தால் பாதிக்கப்பட்டார்கள் மற்றும் இதனால் சுமார் 17-31 (2) கோடி ரூபாய், பயன்படுத்தப் படாமல், திரும்பி கொடுக்கப்பட்டது, என்றும் சுட்டிக் காட்டுகிறது. தமிழ்நாடு மாநிலம் கோரிய 4805.82 கோடியில், 2347.19 கோடி ரூபாய் ஒதுக்கப்பட்டது. வழங்கப்பட்ட 820.31 கோடியில், 597.67 கோடி ரூபாய் மட்டுமே செலவு செய்யப்பட்டது. மத்திய அரசு 2939.85 கோடி ரூபாய் பெருமானமுள்ள அயல்நாட்டு நிதி உதவியும் பெற்றது. ஆனால் ஜூன் 2006 மாதம் வரை, 249.88 கோடி ரூபாய் மட்டுமே பிரித்து அளிக்கப்பட்டுள்ளது. மீதமுள்ள 2689.97 கோடி ரூபாய் மத்திய அரசின் கையில் பாதுகாக்கப்படுகிறது (6).

கடந்த மூன்று ஆண்டுகளில் "பிரதம மந்திரி நிவாரண நிதியின்" வரவு-செலவு கணக்கை ஆய்வு செய்யும்போது, 2005-206 கால கட்டத்தில் சுமார் 1460-96 கோடி ரூபாய் பயன்படுத்தப்படாமல் முடக்கி வைக்கப்பட்டுள்ளது என்று அறிகிறோம். 2004-2005 காலத்தில் இந்த நிதியில் 952.8 கோடி ரூபாய் இருந்தது. இந்த தொகையில் 111.6 கோடி மட்டுமே செலவு செய்யப்பட்டு, 1286 (10) கோடி ரூபாய் மீதமானது. நவம்பர் 2000 மாதம் முடிய, மாபெரும் அசுர சூறாவளியால் தாக்குண்ட ஒரிஸ்ஸா மாநிலம், மத்திய அரசின் நிதி உதவி தொகையில் 23 விழுக்காடு மட்டுமே பயன்படுத்தியது.

2000-ம் ஆண்டு வரை, கட்டாக் மற்றும் ஜெகத்சிங்பூர் மாவட்டங்களில் சுமார் 39 ஆயிரம் பேர் வீடு கட்ட உதவி தொகை நாடி காத்திருந்தார்கள். (12)

ஒரிஸ்ஸா மாநில மந்திரி வாக்குப்படி, மாநிலம் தேசிய கலக நிவாரண நிதி (NFCR) யிலிருந்து 828.15 கோடி ரூபாய் மற்றும் பிரதம மந்திரி தேசிய நிவாரண நிதியிலிருந்து (PMRNF) 38.10 கோடி ரூபாய் பெற்றதாகவும் கூறுகிறார். மார்ச் 2001-ஆம் ஆண்டுவரை நிவாரணத்திற்காக அரசு செலவு செய்த 1149.21 கோடி ரூபாயில், பயன்பாட்டு சான்றிதழ்களை 49.83 கோடிக்கு மட்டுமே இலாக்காக்கள் பெற்றிருப்பதாக அறிக்கை சுட்டி காட்டுகிறது. நீர் வளம், கிராமிய மேம்பாடு வீட்டு வசதி மற்றும் பணிகள், நகர்சார் வளர்ச்சி போன்ற இலாக்காக்கள் கொடுக்கப்பட்ட நிவாரண நிதியை முழுமையாக பயன்படுத்தவில்லை என்பதையும் அவர் ஒப்புக் கொண்டார். இந்திரா அவாஸ் யோஜனா (IAY) திட்டத்தின் கீழ் ஒப்புதல் அளிக்கப்பட்டுள்ள 6.3 லட்சம் வீடுகளில், பாதிக்கப்பட்டவர்களுக்கு இதுவரை 1.79 லட்சம் வீடுகள் மட்டுமே கட்டி முடிக்கப்பட்டுள்ளது என்று மந்திரி கூறினார். மார்ச் 15, 2002 வரை, உலக வங்கி முதல் கட்டமாக வழங்கிய 230 கோடி ரூபாய் கடன் பணத்தில், 43 கோடி ரூபாய் மதிப்புள்ள நலப்

பணிகள் மட்டுமே செய்யப்பட்டு உள்ளன. பரிந்துரைக்கப்பட்ட 100 சூறாவளி பாதுகாப்பு கூடாரங்களில், 11 மட்டுமே கட்டி முடிக்கப்பட்டு உள்ளன; என்றும் கூறினார் (13).


பிரதம மந்திரி நிதியிலிருந்து வெள்ள நிவாரணம் மற்றும் புனரமைப்பு பணிக்காக மஹாராஷ்டிரா மாநிலம் பெற்ற 10.49 கோடி ரூபாய், அவசர சீரமைக்கும் வேலைகளுக்கு செலவிடப்படாமலேயே இருந்தது.

மேற்சொன்ன எடுத்துக்காட்டுகளிருந்து, ஒரு புறம் மக்கள் நிவாரணம் மற்றும் மறுவாழ்வு இன்றி தவிக்கையில், மற்றொரு புறம் மக்களுக்காக ஒதுக்கப்பட்ட நிதி, பயன்படுத்தப்படாமல், அரசு வங்கிக் கிடப்பில் இருப்பது கண்கூடு.


நிதியை பயன்படுத்தாத தன்மைகளுக்கு, காரணம் என்னவென ஆராய்கையில் மூன்று சாத்தியப்பாடுகள் உள்ளன: கோரிய அளவு நிதி, மாநில அரசுக்கு தேவைப்படவில்லை, அல்லது கிடைத்த நிதியை பயன்படுத்தும் திறன் மாநில அரசுக்கு இல்லை, அல்லது இந்த நிதியை நிர்வகிக்கும் செயல்திறன் அரசிடம் இல்லை. மேற்சொன்ன எடுத்துக்காட்டுகள் தெளிவாக்குவது என்னவெனில் தங்களுடைய செல்ல திட்டங்களுக்கு நிதியை திசை திருப்பும் போக்கும் உள்ளது என்பதே.

சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் கூட, ஒரு புறம் கிராமங்களில் தரையிறங்கும் மனைகளை இணைக்க, மற்றும் சந்தைக்கு செல்லும் வழிகளில் சாலை அமைக்கப்படவில்லை அல்லது பணி முடிவடையாமல் இருக்கிறது, மற்றொரு புறம் சுற்றுலாத் துறை பயனடையும் வகையில் பல்வேறு சாலைகள் அமைக்கப்படுகின்றன. சுனாமிக்கு முன்பு பணம் வெற்றுக் கிடப்பில் போடப்பட்டது, ஆகவே கலக நிவாரண நிதி வேறு வளர்ச்சி திட்டங்களுக்கு திசை திருப்பப்பட்டது என்னும் வழக்காடுதல் தவறான ஒன்றாகும், ஏனெனில், "சும்மா" கிடக்கும் பணம் வட்டித்தொகை ஈட்டும் வாய்ப்பை இழக்கிறது, ஆகவே இதையும் நாம் நிதியை தவறாக பயன்படுத்தும் போக்காகத் தான் கொள்ள வேண்டும். நிவாரண நிதியின் மீதான வட்டித்தொகையும், நிவாரணம் சார்ந்ததே, ஆகவே இதுவும் பேரழிவுகளால் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரியதாகும்.

# நிதி உதவி மறுப்பு




**நிதியளிக்க மறுப்பது**



நிவாரணம் மற்றும் புனரமைப்புக்கான உரிமை பல்வேறு தளங்களில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது, ஒரு சட்ட உரிமையாக மட்டும் அல்லாமல் நன்னெறி சார்ந்த மனித உரிமையாகவும் கருதப்படுகிறது. இருப்பினும், பல்வேறு காரணங்களால் கூட்டு சதியாக நின்று, நிதியளிப்பதையும் அதன் வழியே ஏற்படும் நிவாரணம் மற்றும் புனரமைப்பும் மக்களுக்கு மறுக்கப்படுகிறது. மீனவ (கடல்நீர்) உதவி ஆணையர், பூரி - அவர்களிடம் போதுமான நிதி இருந்த போதிலும், பூரி மாவட்டத்தின் 712 மீனவர்களுக்கு பண உதவி கிடைக்கவில்லை. இந்த நிதி உதவி சூறாவளியால் சிதைந்த படகு மற்றும் வலைகளை பழுது பார்க்க தேவைப்பட்டது. (CAG அறிக்கை 2000-2001).

சுனாமிக்கு பிறகான மூன்று மாதங்களில், எவ்வாறு தலித் இன மக்கள் ஒதுக்கப்பட்டார்கள் மற்றும் அவர்களின் நிவாரணம் மற்றும் புனரமைப்பு உரிமைகள் மறுக்கப்பட்டது என்பது நமக்கு நினைவிருக்கும். போராட்டங்கள் காரணமாக பெரிய நிதி உதவி நிறுவனங்களும், அரசாங்கமும் இந்த தவறை திருத்திக் கொள்ள முடிந்தது. இதற்கு முக்கிய காரணம், பல தலித் அமைப்புகளும், அரசு-சாரா அமைப்புகளும், செயலாக்க குழுக்கள் ஒன்றிணைந்து செயல்பட்டு, குரல் எழுப்பியதால் இந்த தவறு சரி செய்யப்பட்டது.

மத்திய அரசு நிதியை பொருத்தவரை, 1995ல் கலக நிவாரண நிதியை (CRF) உருவமைத்தது. இந்த நிதியில் உள்ள பணம், சூறாவளி, வறட்சி, நில நடுக்கம், தீ விபத்து, வெள்ளம், சுனாமி, நிலச்சரிவு, புயல், பனிச்சரிவு, மின்னல் விபத்து மற்றும் வேளாண்மை பூச்சி தாக்குதல் போன்ற அழிவுகளின் போது, பாதிக்கப்பட்டவர்களுக்கு வழங்கப்படும் உடனடி நிவாரண செலவுக்கு பயன்படுத்தப் படவேண்டும். CRF மூலம் மாநிலங்களுக்கு நிதி ஒதுக்கப்படுகிறது. மொத்த நிதியின் மத்திய அரசின் பங்கு 75 விழுக்காடாகவும், மாநிலத்தின் பங்கு 25% ஆகவும் உள்ளது.

பத்தாண்டுகளுக்காக நிதி பயன்பாட்டு அறிக்கையில், CAG 2000-ம் ஆண்டு கூற்றுப்படி மாநில அரசுகள் கலக நிதியை தவறாக பயன்படுத்துவதாகவும், மத்திய அரசின் மானியங்களை தினசரி செலவுகளுக்காக பயன்படுத்தியதால், கலகத்தை சமாளிக்க பணப் பற்றாக்குறை ஏற்படுவதாக கூறியுள்ளது.

ஒரிஸ்ஸாவின் அசுர சூறாவளியாகட்டும், குஜராத்தில் மாபெரும் நில நடுக்கமாகட்டும், அல்லது தற்போதைய சுனாமி போன்ற பேரழிவுகளின்போது, இதனால்தான் துயருற்ற மக்களுக்கு திறமையாக நிவாரணம் அளிப்பதில்,

மாநில அரசுகள் சரியாக செயல்பட முடியாமல் போனது. மத்திய அரசு இரண்டு தவணைகளில் மாநிலங்களுக்கு பணத்தை வழங்குவது புழக்கத்தில் உள்ளது. பயன்பாட்டு சான்றிதழ்களை பெற்ற பின்பே மத்திய அரசு இரண்டாவது தவணையை வழங்குகிறது. CAG குறிப்பிடுவதுபோல, மத்திய அரசு 10,998 கோடி ரூபாயை கலக நிதி (CRF)இல் குவித்தாலும், இந்த நிதியில் 755 கோடி ரூபாயை மாநிலங்கள் பொது வருவாய் கணக்கில் காட்டியுள்ளது. இதனால் மாநிலங்கள் 140 கோடி ரூபாய் வட்டியை இழந்தது மட்டுமின்றி, பொதுவான இயற்கை சீற்றங்கள்; வரட்சி அல்லது வெள்ளம் போன்றவை, நிகழும் போதோ, பெரும் பேரழிவுகள் நேரும் போதும் பணம் இல்லை என கையை விரிக்கின்றன. (14)

ராஜ்யசபாவில் நடந்த கீழ்காணும் விவாதங்கள் மூலமாக நிலமை தெளிவாக புரிகிறது:
"நான் ஒரிஸ்ஸாவை மற்றி குறிப்பாக பேச விரும்புகிறேன். அசுர சூறாவளி, வரட்சி அல்லது வெள்ள நிவாரணத்துக்கு அதிக மானியம் கேட்டபோதெல்லாம், திரு அஜீத் சிங், அன்றைய வேளாண்மை துறை அமைச்சர் மற்றும் பலர் இவ்வாறு பதில் அளிப்பார்கள் "முதலில் கொடுத்த நிதியை உங்கள் மாநில அரசு பயன்படுத்தி, பயன்பாட்டு சான்றிதழ்களை அனுப்புங்கள், இதை பெற்ற பின்புதான் நாங்கள் கூடுதல் ஒதுக்கீடு செய்ய முடியும்". இதுதான் சரியான செயல்முறை.

கேள்வி என்னெவெனில், மாநில அரசு தன்னுடைய வக்கற்ற மற்றும் திறனற்ற பிரச்சினைகளால், கிடைத்த மானியத்தை பகிர்ந்து செலவிடத் தவறினால், இதன் காரணமாக அந்த மாநிலத்தின் மக்கள் ஏன் துயரப்பட வேண்டும்?

அசுர சூறாவளியால் வீட்டை இழந்த ஒருவர், இந்திரா அவாஸ் யோஜனா மூலம் புதிய வீடு பெற உரிமை உள்ளதா, இல்லையா? தாழ்த்தப்பட்ட சாதிகள் மற்றும் தாழ்த்தப்பட்ட ஆதிவாசிகள் மாத உதவித் தொகை பெற உரிமை உண்டா, இல்லையா?

மாநில அரசு தன்னுடைய பங்கை அளிக்கவும், கொடுத்த நிதியை செலவழிக்கவும் திறமையற்று இருப்பதாக, அது நிவாரண நிதியாக இருந்தாலும், பொறுப்பற்று இருப்பதாக நீங்கள் கூறினால், உண்மையான கேள்வி மாநிலத்தின் மக்கள் துயருற்று, நாமோ அல்லது மாநில அரசோ மக்கள் துன்பப்பட அனுமதிக்கலாமா? இதுதான் கேள்வி.
(PB/4P/7.05 திரு ராமசந்திர நந்தியா)

உலக வங்கி, ஆசிய வளர்ச்சி வங்கி, மற்றும் இதர பொருளாதார குழுக்களிடமிருந்து, பெறப்பட்ட நிதியும் இது போன்ற தவறான பயன்பாட்டு மூலம் மக்களுக்கு மறுக்கப்படுகிறது. உதாரணமாக, ஒரிஸ்ஸாவில் அசுர சூறாவளி அழிவு நிகழ்ந்தபோது, "உடனடி கட்டத்துக்காக" 250 கோடி ரூபாய் கடனை உலக வங்கியிடமிருந்து பெற்றிருந்த போதும், அடுத்த "இடைக்கால கட்டத்துக்காக" 500 கோடி ரூபாய் கடனை அந்த வங்கியிடமிருந்து பெற மாநில அரசு பேச்சு வார்த்தை நடத்தியது. "இடைக்கால கட்டத்திற்கு" மாநிலம் உலக வங்கியிடம் 750 கோடிக்கு விண்ணப்பித்து இருந்த போதிலும் உலக வங்கி அதை 500 கோடியாக குறைத்து, மீதப்பட்ட நிதியை நீர்வள மேம்பாட்டு திட்டங்களுக்கு பயன்படுத்த ஒதுக்கியது. (15)

ஒரிஸ்ஸா மாநிலத்துக்கு வாக்களித்த 500 கோடி ரூபாயை உலக வங்கி கொடுக்க தவறியது. புனரமைப்பு பணிகளுக்கு 250 கோடி ரூபாய் கொடுப்பதாக உறுதி அளித்த, பிரிட்டன் அரசின் உலக வளர்ச்சி இலாகா, வெறும் 13 கோடி ரூபாய் மட்டுமே கொடுத்தது. சுமார் 20,000 கோடிக்கும் மேலான சேதம் ஏற்பட்டும், திவாலான ஒரிஸ்ஸா மாநில அரசு சுமார் 2000 கோடி ரூபாய் மட்டுமே பெற முடிந்தது. (16)

இது போன்ற பன்னாட்டு நிதி நிறுவன உதவியில் இன்னொரு பிரச்சினையும் உள்ளது. டாமென் மில்லெட், எரிக் து செயிண்ட் மற்றும் ஃபிராகோயிஸ் ஹோடார்டு மூவரும் எழுதிய "சுனாமி நிதி உதவி மற்றும் கடன் ரத்து" [B.YOO.M60] (22) என்ற புத்தகத்தில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பன்னிரெண்டு நாட்டு அரசுகள், சுமார் 38 பில்லியன் டாலர்களை "கடன் சேவைகளு"க்காக கொடுக்கின்றன.

பத்து பில்லியன் டாலர் அளவு குவியும் உலகளாவிய நன்கொடை பணம், கடன் சேவை மற்றும் வட்டிக்காக விழுங்கப்பட்டுவிடும். ஆகவே, இவர்கள் கண்ணோட்டத்தில், மேலும் நிதியை கடனாக கொடுப்பதற்கு பதிலாக, ஏற்கனவே உள்ள கடன்களை ரத்து செய்தல் சிறந்த நடவடிக்கையாக இருக்கும் என கருதுகிறார்கள்.

கடினமான சூழ்நிலைகளில், குறைந்த நேரத்தில் அதிகப்படியான பணத்தை மக்களுக்கு பகிர்ந்தளிக்க வேண்டி உள்ள, பேரழிவு காலங்களில், பணச்செலவு மற்றும் பயன்பாட்டை சரியாக கணக்கிடுவதும் பிரச்சினையாக உள்ளது.

இத்தகு சூழலில், ஓரளவு நிதி அதிகாரிகள், ஊழியர்கள் மற்றும் தகுதியற்றவர்களுக்காக தவறாக நிதிப்பணம் ஓரளவு சுருட்டப்படும் என்பது பரவலான எண்ணம். இத்தகு நிகழ்வுகளை தடுக்க நிதி வழங்க நெறிமுறைகள் வகுக்கப்பட்டுள்ளன.

உள்ள சட்ட நெறிமுறைகள் போதுமா? சாங்கிலி மாவட்டத்தின், கடேகாவ் தாலுகாவில் விவசாயிகளுக்கு பயிர் நாசத்தை ஈடுகட்ட 5.8 கோடி ரூபாய் வழங்கப்பட்டது, தவறான பயன்பாட்டுக்கு தெள்ளிய உதாரணமாக சுட்டப்படுகிறது. வானிலை துறை அளவுகோல்களின்படி, 125 மில்லி மீட்டருக்கும் அதிகமாக மழை பொழிந்தால் மட்டுமே அதை "பெரு மழை" என்று கொள்ள வேண்டும். ஆனால் கடகோவ் பகுதியில் 75 மி.மி. மழை மற்றும் அந்த பகுதியை அடுத்த கிராமங்களில் 65 மி.மி. மழை மட்டுமே பெய்து இருந்தது. இந்த நிகழ்வை சுட்டிக்காட்டி பணம் விரயம் செய்யப்பட்டு இருப்பதாக CAG அறிக்கை தெரிவித்தது. (3) குறைந்த மழை பெறும் பகுதிகள், வேறு பகுதிகளில் வெள்ளத்தின் காரணமாக, பாதிக்கப்படலாம் அல்லவா?

2006-ல் நடந்த பெருமழை வெள்ளம் காரணமாக மும்பை நகரத்துக்கு மட்டுமே 1200 கோடி நிவாரணம் ஒதுக்கப்பட்டது. இந்த தொகையில் சுமார் 700 கோடி வீணாக செலவு செய்யப்பட்டதாக கூறப்படுகிறது. சுமார் 6.44 கோடி ரூபாய் மெருமானமுள்ள நிவாரணம், 644 குடும்பங்களில் மஹாராஷ்டிராவில் உயிரிழந்தவர்களுக்கு பிரதம மந்திரி நிவாரண நிதியிலிருந்து மறுக்கப்பட்டது. (3)

மனிதாபிமான கடமைக்கு பதில் அதிகார வர்க்க சட்டதிட்டங்கள் எப்படி நிவாரணத்தை முடிவு செய்கிறது என்பதற்கு இன்னொரு எடுத்துக்காட்டு மும்பை. ஜூலை 2005-ல் நடந்த பெருமழையின்போது, மும்பை நகருக்கு குறைந்த அளவு உதவித்தொகை வழங்கப்பட்டது. அடித்து செல்லப்பட்ட பல கட்டிடங்கள் அனுமதி பெறாதவை என்பதை இதற்க்கு காரணமாக சொன்னார்கள். 60% விழுக்காட்டுக்கும் அதிகமான இத்தகு கட்டிடங்கள் சட்டத்துக்கு புறம்பானவை மற்றும் அங்கீகாரம் பெறாதவை என்பது உண்மையாயினும், முக்கியமான கேள்வி என்னவெனில் பெரும் கலகங்களின் போது இந்த மக்களுக்கு நிவாரணம் பெரும் உரிமை உண்டா இல்லையா? என்பது தான்.

சட்டங்களை யார் வகுக்கிறார்கள்? தேசிய உச்சமட்ட கணக்கு ஆய்வாளரா அல்லது மாநில அரசா? உள்ளூர் ஆட்சி அமைப்புகளா? அல்லது அரசு-சாரா அமைப்புகளா? இந்த சட்டங்கள் கிராம சபாவின் முழு ஒப்புதல், பங்கீட்டுடன் வெளிப்படையாக வகுக்க முடியுமா? உள்ளூர் தேவைகளை கருத்தில் கொண்டு, இன்னும் சரியான, சிறப்பான மக்கள் சார்ந்த சட்டங்களையும், நெறி முறைகளையும் நம்மால் வகுக்க முடியும். நிச்சயமாக நம்மிடம் உள்ள அறுபது ஆண்டு கால அதிகார நிர்வாக திறமையை பயன்படுத்தி சட்டங்களை வகுக்க முடியும்!

உலக நிதிக் கழகம் (IMF) வெளியிடும் காலாண்டு பத்திரிகையான (மார்ச் 2007, தொகுப்பு 44, எண்:1) நிதி மற்றும் வளர்ச்சி என்ற ஏட்டில் உலகளாவிய நிதி நிறுவனங்களின் கருத்தை அறியலாம்: "தங்களுடைய உடனடி மற்றும் அவசர செலவீனங்களுக்காக, பேரழிவு சாத்தியப்பாடுள்ள வளர்ந்து வரும் நாடுகள், வெளிநாட்டு நன்கொடை நிறுவனங்களிடமிருந்து, மானியம் மற்றும் கடன்கள் போன்ற பேரழிவுக்கு பின்பான நிதி திரட்டை எதிர்பார்க்கின்றன. இத்தகைய வெளிநாட்டு நிதி பாய்வதை, நம்புவதால், பல தீமைகள் ஏற்படுகின்றன. முதலாவதாக, நன்கொடை நிதிகள் உறுதியளிக்கப்படுவதில் பெரும் கால தாமதம், மேலும் உறுதி செய்த நன்கொடை நிதியை வழங்குவதில் மேலும் பெரும் காலம் வீணாகிறது. இரண்டாவது, நிவாரண நிதித் தேவைகள் உள்ள மற்ற நாடுகளும் இதே நன்கொடை வளம் மற்றும் நிதியை குறிவைப்பதால், போட்டி சூழ்நிலை உருவாகும்.

ஆனால் பேரழிவுகளுக்கு எதிராக நாடுகள் காப்பீடு செய்து கொண்டால் ஓரளவுக்காவது, மிக அவசரத் தேவையான நிவாரண நிதியை முன்கூட்டியே பெற இயலும். இத்தகைய காப்பீட்டு திட்டம் என்பது ஒரு தொலைவான கருத்தாக்க சாத்தியப்பாடு அல்ல. அதிக-வருமானமுள்ள அமெரிக்கா மற்றும் ஜப்பான் போன்ற நாடுகள் பல இயற்கை பேரழிவுகளுக்கு எதிராக காப்பீடு செய்ய இயலும் என்ற அனுபவத்தை நமக்கு அளிக்கின்றன, மேலும் இந்நாடுகளில், பேரழிவுக்கு எதிரான காப்பீட்டு சந்தை நன்கு நிலை கொண்டுள்ளது.

பேரழிவு நேரும் அபாயம் உள்ள நாடுகளின் வளங்கள் மற்றும் காப்பீட்டு திட்டங்களின் விலையை நோக்கும்போது, காப்பீட்டு தவணைகளை செலுத்த இந்த நாடுகள் நன்கொடைகளை முன்கூட்டியே பெற வேண்டிய தேவை உள்ளது. பேரழிவுக்கு பின்பு என்ற நிலைக்கு பதில் பேரழிவுக்கு முன்பே நன்கொடை நிதி வழங்கும் சூழ்நிலை அனைத்து தரப்பினருக்கும் நன்மை பயக்கும். பெறுனர்களுக்கு, காப்பீடு நிதி கிடைக்கும் அளவை முன்பாகவே அறிந்து கொள்ளுவதனால், பேரழிவுக்கு பின்பான பொது நிதி நிலவரம் கணிக்கக் கூடியதாக இருக்கும். நன்கொடையாளர்களுக்கு, "எப்போது?, ஒரு வேளை" போன்ற நிலைகளை, கணித்து உரைக்கக்கூடிய காப்பீட்டு தவணைகளாக மாற்றவும், சீரான பணப் போக்குவரத்தை உண்டாக்கவும் உதவிகரமாக இருக்கும். இது மட்டுமின்றி, தற்காப்பு காப்பீடு திட்டங்களில், அதிக ஆளுமை செலுத்தும் வாய்ப்புக்களும் நன்கொடையாளர்கள் பெறுவார்கள். (கட்டிட பட்டியல் போன்றவை). பேரழிவுக்கு பின்பான, நன்கொடை நிதி மூலமாக பெறுனர் நாடுகள் எதிர்கொள்ளும் சார்புடைமை மற்றும் வக்கிரமான ஊக்கங்களையும், இத்தகைய திட்டங்கள், முறியடிக்கும். அழிவு அபாயம் அதிகம் உள்ள நாடுகள் பெரும் சேமிப்பு மற்றும் இயற்கைப் பேரழிவுகளுக்கு எதிரான தற்காப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ள பெரிய ஊக்கம் மற்றும் உந்துசக்தி எதுவுமில்லை, ஏனெனில் இத்தகைய முன்னெச்சரிக்கை செயல்பாடுகள், பேரழிவு ஏற்படும் பொழுது, நன்கொடையாளர்களின் ஆதரவை குறைக்கலாம். (உலக நல ஊழியர்கள் சந்திக்கும் இக்கட்டு). கணித்து கூறக்கூடிய காப்பீட்டு நஷ்ட ஈடு தொகைகள் மூலம், தற்காப்பு சார்ந்த அமைப்பு மற்றும் கொள்கைகளை வகுத்து, நிதி ஒதுக்கீடு செய்ய, நாடுகளுக்கு தேவையான ஊக்கம் மற்றும் உற்சாகம் இருக்கும்.

- டேவிட் ஹாஃபமான் - பேரழிவு சவால்களை வீழ்த்தும் தருணம் (என்ற படைப்பிலிருந்து)

# பேரழிவுகளுக்கு பின்பான திட்டங்கள்

பேரழிவுகளுக்கு பின் குவியும் பெருவாரியான நிதி மற்றும் பணப்போக்குவரத்து எவ்வாறு நிவாரணத்துக்கு தொடர்பற்ற பணிகளுக்கு திசை திருப்பப் படுகிறது என்பதை ஏற்கனவே பார்த்தோம். தினசரி அரசாங்க மற்றும் அதிகார வர்க்க செலவீனங்களுக்காக நிதி திசை திருப்பப்படுவது மிக கொடுமையான செயல்பாடு. அரசு பல்வேறு கவைக்குதவாத மற்றும் பயனற்ற பல திட்டங்களை வகுத்து, அதன் பின்னர் பேரழிவு நிவாரண நிதியை மென்று ஏப்பம் விடுவதுதான் மிக சலிப்பூட்டக்கூடிய விஷயம். எடுத்துக்காட்டாக, போபால் விஷ வாயு அழிவின் போது, பாதிக்கப்பட்ட தனி நபர்கள் வழக்கு பதிவு செய்வதை தடுத்து யூனியன் கார்பைடு நிறுவனத்திற்கு எதிராக, அரசாங்கமே நஷ்ட ஈடு பெற வழக்கு தொடர வேண்டும் என்ற சட்டத்தை நிறைவேற்றியது. உடல்நல கட்டுமானத் துறையை வளர்த்தெடுக்கிறோம் என்ற போர்வையில், அதி நவீன சிறப்பு மருத்துவ மனைகளை கட்ட பெருமளவு தொகை செலவிடப்பட்டது.

இதே போல் தான் அவசரமாக சுனாமி ஜன பீமா யோஜனா என்ற திட்டம் வகுக்கப்பட்டது. இந்த திட்டத்தின் மூலம், 4.57 லட்சம் குடும்பங்கள் சார்பாக சுமார் 36.5 கோடி ரூபாய், தவணைப் பணமாக காப்பீட்டு நிறுவனங்களுக்கு கட்டப்பட்டது. இதற்கு பதிலாக இந்த 36 கோடி ரூபாயை சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பொது மருத்துவ மனைகள் கட்டியிருப்பின், பயனுள்ளதாக இருந்திருக்கும், ஏனெனில் இப்பகுதியில் வாழும் ஏழை மக்கள் சிகிச்சைக்காக இந்த மருத்துவமனையை பயன்படுத்தி இருப்பார்கள் அல்லவா? ஒரு முறை ரூ. 15,000 காப்பீடு அளிக்கும் இத்தகு காப்பீட்டு திட்டங்கள், காப்பீட்டு நிறுவனக்களின் காப்பீட்டு கட்டணம் சேகரிக்கும் செலவை வெகுவாக குறைக்கின்றது. மிகப் பெருவாரியான மக்கள் தொகுதியிலிருந்து, அறிமுக விழா நடத்தும் செலவு தவிர, ஒரே தவணையில் இவ்வளவு பெரிய காப்பீட்டு தொகையை திரட்டுவது காப்பீட்டு நிறுவனங்களுக்கு வரப்பிரசாதமாக அமைந்தது. அரசு ஏற்கனவே ஒரே தவணையில் செலுத்தும் 36 கோடி காப்பீட்டு கட்டணம். இந்த தொகையில் இதே குடும்பங்கள் பொது மருத்துவமனைக்கு செல்லும் போது குறைந்த செலவில் சிகிச்சை பெறலாம் அல்லவா? இப்படி செய்யும் அதே வேளையில், பொது மருத்துவமனைகளில் உள்ள நெரிசல் மற்றும் பிரச்சினைகளை தீர்க்க முடியும் அல்லவா?

மருத்துவ உதவி சம்பந்தப்பட்ட காப்பீட்டு திட்டங்கள், ஒரு குடும்பம் ஒரு ஆண்டுக்கு ரூபாய் 30,000/- வரை ஏற்படும் மருத்துவமனை அனுமதி செலவுகளை ஈடுகட்டும். இந்த மருத்துவமனை அனுமதி மற்றும் நோய்கள் பற்றி பல உட்பிரிவுகள் உள்ளன. பதிவு பெற்ற சில மருத்துவமனைகள் இந்த சுனாமியால் பாதிக்கப்பட்ட குடும்பங்களுக்கு சிகிச்சை அளிக்கும். இதற்காக ஒவ்வொரு குடும்பத்துக்கும் ஒரு மருத்துவ அடையாள அட்டை வழங்கப்படுகிறது. பெரும் ஆரவாரத்துடன், இந்த திட்டம் அறிவிக்கப் பட்டாலும், இந்த திட்டத்தை பற்றிய தெளிவு எவருக்கும் இல்லை. மேலும் இந்த திட்டத்தில் சேர்ந்து கொள்வது எப்படி என்ற விவரமும் புரியவில்லை. இப்படியாக "நம்முடைய பணத்தை" காப்பீட்டு நிறுவனங்கள் வாங்கி, அதன் மீது சும்மா அமர்ந்து கொண்டு இருக்கின்றன!

உலகளாவிய நிதி நிறுவனங்கள் இதே போன்ற அணுகுமுறையை, பொது மக்கள் பணத்தை பேரழிவு காப்பீட்டு நஷ்ட ஈடாக மாற்றும் கருத்தை முன் வைக்கின்றன. அவர்கள் கருத்துப்படி, பேரழிவுகள் நிகழ்ந்தால் இத்தகு காப்பீட்டு திட்டங்கள் மூலமாக புனரமைப்புக்கு தேவைகளுக்கு நிதியை எளிதாக பெற முடியும் என்பதாக உள்ளது. இது எப்படி

செயல்படுகிறது என்றால், அரசு மக்கள் சார்பாக நாளுக்கு நாள் உயர்ந்து கொண்டே இருக்கும் காப்பீட்டு கட்டண தொகையை காப்பீட்டு நிறுவனங்களுக்கு செலுத்திக் கொண்டு இருக்கும், ஆனால் நஷ்ட ஈடு கொடுக்க வேண்டிய நேரம் வரும்போது, ஒவ்வொரு பாதிக்கப்பட்ட தனிநபரும் காப்பீட்டு நிறுவனத்துக்கு சென்று, நஷ்ட ஈடு மற்றும் நிவாரணம் பெற பல்வேறு படிவங்கள் மற்றும் ஆவணங்களை கொடுத்து அலைந்து திரிய வேண்டும்? இத்தகைய பேரழிவுக்கு பின்பான பணவரவை ஏற்படுத்தும் நிலைப்பாடு, பேரழிவுக்கு ஆதரவாக தாராளமாக பண உதவி மற்றும் நன்கொடை வழங்கும் திறந்த மனம் கொண்ட பொது மக்களுக்கு செய்யப்படும் அவமானமன்றி வேறு ஒன்றுமல்ல. காப்பீடு என்னும் கருத்தாக்கம் ஒட்டுமொத்த சமூகம் சார்ந்ததாக இருத்தல் வேண்டும், ஒட்டுமொத்த மனித சமூகம் ஒன்று திரள்வது, ஒரே குடும்பத்தின் அங்கத்தினர்கள் என்ற எண்ணத்தில், பேரழிவு ஆபத்துக்கள் மனித இனத்துக்கு பொதுவானது என்னும் கருத்தோட்டத்தில், தான தர்மம் செய்யும் மனப்பான்மை தவிர்த்து, மனித இனத்துக்கான காப்பீடு என்ற முறையில் செயலாற்றுவதே சரியான அணுகு முறையாகும்.

# சுனாமி மற்றும் அரசு-சாரா அமைப்புக்களின் நிதி

அரசு-சாரா அமைப்புக்களின் நிதிக் கொள்கையை ஆராயும்பொழுது, அது பன்முகம் சார்ந்து இருப்பதும், அனைத்து அமைப்புக்களையும் ஒரே அளவு கோல் கொண்டு மதிப்பட முடியாததும் சிக்கல். பெரும்பான்மையான அரசு-சாரா அமைப்புக்கள் நெறி சார்ந்து நல்லவையாக இருப்பினும், அவர்கள் நல்ல, முயற்சிகளில் ஈடுபட்டாலும், இவைகளுக்கு இடையே சில மோசமான அமைப்புகளும் இருந்து அனைவருக்கும் அவப்பெயரை பெற்று தருகின்றன. ஆனால் இந்த கட்டுரையில் இது போன்ற மோசமான அமைப்புகளை பற்றி பேச போவதில்லை. கொடை நிறுவனங்கள் என்று நாம் குறிப்பிடுபவை, பொது மக்களிடமிருந்து நன்கொடை திரட்டும் அரசு-சாரா அமைப்புகளாக உள்ளன. இது தவிர பொதுமக்களிடமிருந்து திரட்டப்பட்ட தொகைக்கு சமமாக, தங்களுடைய அரசாங்கங்களிலிருந்து மானியம் பெறுகிறார்கள் (இதுவும் மக்கள் பணம் தான்.). இத்தகைய கொடை நிறுவனக்கள் எண்ணிக்கையில் அதிகமாக இருப்பினும், இவற்றினிடையே கூட்டு செயல்பாடு மற்றும் ஒன்றுபடுதல் போன்ற செயல்பாடுகளை முன்வைப்பவை சில அமைப்புகள்: வேர்ல்ட் விஷன், மா அமிர்தமாயா, கிருத்துவ-பள்ளி சாராத ஆக்ஸ்பாம், ஆக்ஷன் எய்டு போன்ற அமைப்புகள் இந்த வகையை சேர்ந்தது.

நிர்வாகம் மற்றும் வழமையான செலவுகள் ஒரு கட்டுக்குள் இருக்க வேண்டும் என்பது பொதுக் கருத்து எனினும், பல சமயம் இத்தகு செலவுகள் தவறாக கணக்கிடப்படுகின்றன. கொடை நிதியின் எதிர்கால தவணைகள் ரத்து செய்யப்பட்டாலும், நிர்வாகம் மற்றும் வழமையான செலவுகள் பழைய நிலையிலேயே தொடர்ந்து, ஒட்டுமொத்த நிதியில் நிர்வாக மற்றும் தினசரி செலவுகளின் விழுக்காடு அதிகரிக்கிறது.

உள்ளூர் அரசு-சாரா அமைப்புகள் அல்லது கொடை நிறுவனங்களின் உள்ளூர் அலுவலகங்கள், திட்டங்கள் மற்றும் வரவு-செலவு கணக்கு சமர்ப்பித்து, அதன் மூலம் நிதி விநியோகம் மற்றும் முடிவெடுத்தல் ஆகியவை செய்யப்படுகின்றன. இது பொதுவாக கொடை நிறுவனங்களின் கொள்கை திட்டம் மற்றும் வழிமுறைகள் சார்ந்து இருந்தாலும், உள்ளூர் அளவில் புதிய கருத்துக்கள், மாற்று முறைகள் ஆகியவைகளை புகுத்த போதுமான வாய்ப்புகள் உள்ளன.

பன்னிரெண்டு கொடை குழுக்களின் குடையின் கீழ் உருவாக்கப்பட்ட பேரபாய அவசர குழு (DEC) கூற்றுப்படி சுனாமி மற்றும் நிலநடுக்க பொது மனுவுக்கு ஆதரவாக 350 மில்லியன் பிரிட்டிஷ் பவுண்டுகள் கொடை நிதியாக திரட்டப்பட்டது மற்றும் 50 மில்லியன் பவுண்டுகள் நேரடியாக உறுப்பினர்களுக்கு கொடை நிதியாக வழங்கப்பட்டது.

2006-ம் ஆண்டு அரையாண்டு காலத்தில் ஆராயும்போது, முதல் ஆறு மாதங்களில் DEC செலவு, கணக்கு திட்டத்துடன் ஒப்பு நோக்கும் போது குறைவாகவே இருந்ததாக தெரிகிறது. (16)

ஆசியாவில் சுனாமியால் பாதிக்கப்பட்டவர்களுக்கு, பொதுமக்களால் வழங்கப்பட்ட பெருமளவு நிதியை செலவழிக்க அரும்பாடு பட நேரிடும் என்று பிரிடிஷ் கொடை நிறுவனங்கள் ஒப்புக்கொண்டன. தனிநபர் நன்கொடைகள் மூலமாக 365 மில்லியன் பவுண்டுகளுக்கும் அதிகமாக நிதி திரட்டப்பட்டது. (17).

அழிவு மற்றும் சேதமடைந்த பகுதிகளில், உடனடி அவசர நிவாரணம் என்னும் கட்டத்திலிருந்து

புனரமைப்பு மற்றும் மறு சீரமைப்பு பணிகளில் ஈடுபடும் ஆஸ்திரேலிய உதவி நிறுவனங்கள், பொது மக்களால் ஆசிய சுனாமிக்கு கொடுக்கப்பட்ட நன்கொடையை நல்ல முறையில் செலவு செய்ய 10 ஆண்டுகளுக்கு மேல் ஆகும் என்று தெரிவிக்கின்றன.

ஆஸ்திரேலியாவின் மிகப்பெரும் அரசு-சாரா உதவி நிறுவனங்களின், ஒட்டுமொத்த நிர்வாக செலவுகள் 21.2 மில்லியன் டாலர் - அதாவது மொத்த நிதி திரட்டின் 9 விழுக்காடாக இருக்கும் என்பது கணக்கெடுப்போது தெரிய வந்துள்ளது. (18)

ஆக்ஷன் எய்ட் நிறுவனம், சுனாமி சம்பந்தப்பட்டு டிசம்பர் 2005 ம் ஆண்டு முடிய 10,849,749 பவுண்டுகள் செலவழித்துள்ளது. இது கணக்கு திட்டப்படி 76 விழுக்காடு செலவாகும். ஜனவரி முதல் டிசம்பர் முடிய வருடாந்திர கணக்கு திட்டம் மூலம் 14,237,997 (19) பவுண்டுகளை ஒதுக்கியது. சுனாமி தொடர்பான திட்டங்களுக்கு இந்தியாவில் ஆக்ஷன் எய்டு நிறுவனம் 7.1 மில்லியன் பவுண்டுகளை செலவழித்து உள்ளது. (20). ஜனவரி தொடங்கி அக்டோபர் 2006 முடிய மொத்த செலவு 7,567,629 பவுண்டுகளாக இருந்தது - இது கணக்கு திட்டத்தின் 61 விழுக்காடாகும். (21).

இதன் மூலம் நாம் அறியக் கூடியது என்னவெனில் அரசு-சார அமைப்புகள் கூட நிதிப் பணத்தை முழுமையாக பயன்படுத்த திண்டாடுகின்றன என்பதுதான். 2005 - 2007ம் ஆண்டுகளில் திட்டமிடப்பட்ட செலவு மொத்தம் 35,204,519 பிரிட்டிஷ் பவுண்டுகளாக உள்ளது. (21).


அரசு-சாரா அமைப்புகள் தனியார் பணத்தை பயன்படுத்துவதால், அவர்கள் எந்த வகையில் பணத்தை பயன்படுத்துகிறார்கள் என்று கேட்கும் உரிமை இல்லை என்று வாதிடக்கூடும். ஆனால் அரசு நிதியை பற்றி உரிமை இருப்பதகாவும் எண்ணக் கூடும். காலப்போக்கில் அரசு-சாரா அமைப்புகளின் தலையீடு நிறுவனமயமாக்கப்பட்டுள்ளது, மற்றும் புனரமைப்பின்போது அவ்வமைப்புகளின் பங்கு முக்கியமானதாக உள்ளது, ஆகவே நாம் இதை "பொது மக்கள் முயற்சி" என்று எண்ணும் வகையில் வளர்ந்து நிற்கிறது. இதனால்தான், நிதி எவ்வாறு பயன்படுத்த படுகிறது மற்றும் ஊழல் நடந்துள்ளதா என்பதை தட்டிக் கேட்கும் உரிமை மட்டுமின்றி, அவர்களுடைய திட்டங்கள் மற்றும் திட்ட முயற்சிகளின் வழிமுறைகளை கேள்விக்கு உள்ளாக்கும் உரிமையும் நமக்கு உள்ளது என்று உணர வேண்டும்.

அரசு-சாரா அமைப்புகள் பெயரளவுக்கு, சமூக பங்கேற்பு, மக்கள் பங்கு மற்றும் வெளிப்படையான செயல்பாடு போன்றவற்றை முன்வைத்து வருகிறார்கள். ஆகவே மக்கள் பங்கேற்பை அதிகரிக்க செய்வது நம் கடமையாகும்.

மற்றொரு கோணத்திலிருந்தும், அரசு-சாரா அமைப்புகளின் நிதிவரவை நமது மற்றும் நமது உரிமை என்று நினைக்க இடம் உள்ளது. இது மனித இனம் ஒரு கூட்டுமந்தையாக, தன்னை தானே கவனித்து கொள்ளும் கருத்தாக்கத்திலிருந்து எழுவது. மனித இனத்தின் மொத்த தொகையில் 6.7 Billion தோராயமாக 1654130 இத்தனை நபர்கள் பாதிக்கப்பட்டும், தோராயமாக 6.69 Billion இத்தனை நபர்கள் பாதிக்கப்படாமலும் இருந்து, பாதிக்கப்படாத மக்கள் அளிக்கும் பேராதரவும், நன்கொடைகளுமே இந்த கருத்துக்கு சான்றாக உள்ளது.

நீண்ட கால புனரமைப்பு பணிகளுக்கு, வெறும் திட்ட அறிக்கைகள், வரவு-செலவு கணக்கீடுகள் மட்டுமே போதுமானதா என்று ஆராயக்கூடிய, சோதனை செய்யக்கூடிய சரியான வழிமுறைகளும் நம்மிடம் இல்லை. உதவி குழுக்குள் வேகமான, குறுகிய கால திட்டங்கள் மற்றும் செயல்பாட்டில் இறங்குவது தான் இதற்க்கு காரணம், சுனாமி தாக்குதலின் போது, தமிழக அரசு உடனடியாக செயல்பட்டு நிரந்தர வீட்டுவசதி பற்றிய விதி, வழிமுறைகளை வெளியிட்டது. ஆகவே, இதன் மூலம் கட்டிட முறை, நில அளவு, நன்மைகள் பற்றிய அளவுகோல்கள் வகுக்கப்பட்டன. இருப்பினும் சமூக வசதிகள், சுகாதாரம், கட்டுமானம், குடிநீர், போன்ற பகுதிகளில் பல பிரச்சினைகள் ஏற்பட்டு உள்ளன. இதற்க்கு, இந்த கவனக்குறைவுக்கு காரணம், "இவை அனைத்தையும் மாநில அரசு கவனித்துக் கொள்ளும்" என்ற போக்குதான். வீட்டு வசதி மற்றும் ஒட்டுமொத்த கட்டுமான வசதிகளுக்கு இடையே ஒருங்கிணைப்பு இன்னும் ஏற்படவில்லை.

# நீங்கள் என்ன செய்யப் போகிறீர்கள்?



இன்றைய சூழலில் நாம் யாரிடம் செல்வது என்ற குழப்பத்தில் இருக்கிறோம். பெரிய அரசு-சாரா அமைபுக்களிடம் சுனாமி கொடைநிதி இல்லை. அவர்கள் ஏற்கனவே பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து வெளியேறி விட்டார்கள். ஏதேனும் சட்ட ரீதியான நடவடிக்கைகளின் மூலம், எடுத்த பணியை முடித்துக் கொடுக்க அவர்களை நாம் கட்டாயப் படுத்த முடியுமா? உள்ளூர் பஞ்சாயத்துக்கள், உள்ளூர் அரசு-சாரா குழுக்கள் மற்றும் CBOக்கள் இந்த பணியை, மேற்கொள்ளலாம்.

அரசாங்கத்தை பொறுத்த வரையில் நாம் வேறு வகையான வழிமுறைகளை கை ஆளலாம். தகவல் அறிவதற்கான உரிமையை பயன்படுத்தி, திட்டமிட்ட செயல்பாடுகள் மற்றும் அவற்றுக்கான நிதி ஒதுக்கீட்டை பற்றி தெரிந்து கொள்ளலாம். மேலும் சுனாமி திட்டங்களிலிருந்து மற்ற தொடர்பற்ற பணிகளுக்கு எவ்வாறு நிதி திசை திருப்பப்பட்டுள்ளது என்பதை பற்றியும் அறியலாம். குமரி மாவட்டத்தின், கோவளம் பகுதிகளில், சுனாமி நிதி 'சூரியன் மறைவதை' பார்க்கும் வகையில் புதிய கடலோரச் சாலை அமைக்கப்பட்டுள்ளது. இது சுற்றுலா பயணிகளுக்கு பயன்படுமே அன்றி பாதிக்கப்பட்ட மக்களுக்கு இதனால் எந்த பயனும் இல்லை. சுனாமியால் பாதிக்கப்பட்ட ஒரு தீவுத் தொகுதியின் அருகிலும் இதே நிலைதான் உள்ளது. மற்றொரு பகுதியிலும் கோடிக்கணக்கான ரூபாய் கடற்கரையை அழகு படுத்தவும், சுற்றுலா திடல்களை உருவாக்கவும் பயன்படுத்தப் பட்டு உள்ளது. ரூ. 1,400 கோடி ரூபாய் (14,000 மில்லியன் ரூபாய்) செலவில், மகாபலிபுரத்தில் உலகளாவிய சுற்றுலா மையம் நிறுவுவது மற்றொரு மிகப்பெரிய திட்டமாகும். இதற்கு சுனாமி நிதி பயன்படுத்தப் படுகிறதா? இதைப் பற்றி நாம் அறிந்து கொள்ள முடியுமா? இது உண்மையாயின், நமக்காக ஒதுக்கப்பட்ட தொகை, கடலோரத்திலிருந்து நம்மை மேலும் தனிமைப்படுத்தும் செயல்பாட்டுக்கு எதிராக போராட முடியுமா?

மொத்தத்தில், பேரழிவு சார்ந்த நிதி உதவி, அது அரசாங்க நிதியாக, சர்வதேச குழு அல்லது அரசு-சாரா அமைப்பு, யார் திரட்டிய நிதியாக வேண்டுமானாலும் இருக்கட்டும், இந்த நிதி சரியான, திறமையான முறையில் பயன்படுத்தப் படுகிறதா என்று கண்காணிக்கும் பொறுப்பு நம்மை சாரும். தவறான நிதி பயன்பாட்டை குறைக்க ஒரே வழி என்னவெனில், புனரமைப்பு முயற்சி சார்ந்த செயல்முறை, மேற்பார்வை மற்றும் முடிவெடுத்தல் பணிகளில் நாம் முழுமையாக பங்கேற்பது தான். என்னென்ன திட்டங்கள் வகுக்கப்பட்டுள்ளன, அதற்கு எவ்வளவு நிதி ஒதுக்கப்பட்டுள்ளது, திட்டங்கள் மற்றும் ஒதுக்கீடுகள் எந்த அடிப்படையில் வகுக்கப்பட்டுள்ளன, இத்திட்டங்களின் பயன்பாட்டாளர்கள் எவர் என்பதை நம் பகுதி பஞ்சாயத்து மற்றும் உள்ளூர் அரசு-சாரா அமைப்புக்களிடமிருந்து அறிந்து கொள்ள வேண்டும்.

தகவல் அறியும் உரிமை-க்கான சட்டத்தின் உதவியுடன், சரியான தேவையான தகவல் நமக்கு கிடைப்பதை உறுதி செய்து கொள்ள முடியும். மஸ்தூர் கிசான் சக்தி சங்கடன் என்ற அமைப்பு அரசு திட்டங்களின் நன்மை மற்றும் பயன்பாட்டை, இந்த சட்ட உரிமையை வெற்றிகரமாக கையாண்டு எவ்வாறு செயல்படுகிறார்கள் என்பதை நாம் அறிவோம்.

# கூடுதல் வாசிப்பிற்க்கு

RDC திட்டத்தின் கீழ் கல்வி மற்றும் ஆவணப்படுத்துதல் மையம் (CED) பேரழிவு மற்றும் வாழ்நிலை சார்ந்த தகவல் களஞ்சியத்தை உருவாக்கி உள்ளார்கள். இது போன்ற சிறு பிண்னணி கட்டுரைகள் தவிர, குறும்படங்கள், சுவரொட்டிகள், இன்னபிற கல்வி சார்ந்த பிரசுரங்களையும் வெளியிட்டு உள்ளோம். எங்கள் சக ஆதரவு அமைப்பான, ஆர்க்கிடெக்சர் அண்டு டிவலெப்மெண்ட் (A&D) நிறுவனமும், பல்வேறு கல்வியளிக்கும் பெட்டகங்களை வெளியிட்டு உள்ளார்கள். தமிழ்நாட்டில், சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் பணிபுரியும் அனைத்து அரசு-சாரா அமைப்புகள் மற்றும் கிராம தகவல் மையங்களுக்கும், கடந்த இரண்டு ஆண்டுகளுக்கும் மேலாக, CED தொடர்ந்து மாதா மாதம் பல்வேறு புகைப்படங்கள், பிண்னணி கட்டுரைகள் மற்றும் ஒலி-ஒளி நாடாக்களையும் அனுப்பி வருகின்றது. நீங்கள் இவை அனைத்தையும் படித்து பயன் பெறுவது, நன்மை பயக்கும். இந்த பிண்னணி கட்டுரைக்கு தொடர்புள்ள மற்றும் சில ஆவணங்கள் கீழே குறிப்படப் பட்டுள்ளன. இந்த ஆவணங்களை நேரடியாக எங்களுக்கு எழுதி பெறலாம், அல்லது இவற்றை உங்கள் பகுதி VKC உதவியுடன் கண்டு அறியலாம்.

**REFERENCES**


**[1]** Everybody loves a good calamity by Himanshu Upadhyaya, indiatogether.org, September 29 2007, http://indiatogether.org/2004/jul/gov-gujquake.htm [C.Eldoc1.Y03_/12jul07it1.html]

**[2]** CAG finds flaws in tsunami relief, Deccan Herald, December 16, 2006 [C.Eldoc1.Y00_/16dec06dch1.pdf]

**[3]** Maharashtra misspent millions in flood relief: CAG report, NDTV.com, July 25th, 2007, http://www.infochangeindia.org/DisastersItop.jsp?section_idv=12 [C.Eldoc1.Y01_/25jul07inf1.html]

**[4]** Disaster Mis Management, The Times of India, Mumbai, April 18, 2007, [C.Eldoc1.Y01/18apr07toi.pdf]

**[5]** Supercyclone rehab efforts in Orissa make hardly any progress, The Times of India, April 9, 2002, http://www.infochangeindia.org/archives1.jsp?secno=12&monthname=June&year=2002&detail=T, [C.Eldoc1.Y01_/27may02it1.html]

**[6]** Ground Zero by Shankar Aiyar, India Today, January 1, 2007. http://www.indiatoday.com/itoday/20070101/nation2.shtml&SET=T [C.Eldoc1.Y00_/01jan07it1.html]

**[7]** CAG finds diversion of tsunami funds, The Hindu, December 29, 2006, http://www.hindu.com/2006/12/29/stories/2006122911590100.htm [C.Eldoc1.Y00_/TS1_Diversion_of_Tsunami_Funds.html]

**[8]** Walkout over tsunami relief fund issue, The Hindu, August 3, 2005, http://www.hindu.com/2005/08/03/stories/2005080309470100.htm [C.Eldoc1.Y00_/TS1_Tsunami_Relief_Fund_Issue.html]

**[9]** Tsunami Recovery: Sustainability, Poverty, and the Politics of Aid by Dr. Vandana Shiva, May 30, 2005 [C.Eldoc1.0705/politics-of-aid.html]

**[10]** Rs.1500 cr in PM's Relief Fund Lie idle by Viju B, Times of India, March 28, 2007. [C.Eldoc1.Y00_/eldoc1/yoo/28mar07toi2.pdf]

**[12]** CAG pulls up Orissa Govt on post-cyclone relief, Times of India, August 3, 2001. http://timesofindia.indiatimes.com/articleshow/426176955.cms [C.Eldoc1.Y01_/03aug01toi1.html]

**[13]** Orissa relief funds lie unused by Rajaram Satapathy, Times of India, April 9, 2002 http://timesofindia.indiatimes.com/articleshow/6307398.cms [C.Eldoc1.Y01_/09apr07toi1.html]

**[14]** States using relief fund for routine expenses: CAG, Tribune News Service, New Delhi, December 30, 2004. http://www.tribuneindia.com/2004/20041231/nation.htm, [C.Eldoc1.Y00_/30dec04tns1.html]

**[15]** World Bank finds Orissa rehabilitation work quality unacceptable, The Indian Express, April 20, 2002 http://www.infochangeindia.org/archives1.jsp?secno=12&monthname=June&year=2002&detail=T [C.Eldoc1.Y01_/20apr02ie1.html]

**[16]** Dec Tsunami Appeal September 06, Trustee review of year 2 expenditure at six months by DEC Trustees, DEC Board, September 2006 http://www.dec.org.uk/index.cfm/asset_id,1903/index.html [C.Eldoc1/Y00_/TS1_DEC_APPEAL_SEPT_06.html]

**[17]** Charities struggle to spend cash for tsunami by Alexandra Frean and Ben Hoyle. The Times, February 14, 2005 http://www.timesonline.co.uk/tol/news/world/article514278.ece [C.Eldoc1.Y00_/14feb05tt1.html]

**[18]** Ten-year wait for tsunami aid by Ewin Hannan. The Age Company Ltd, March 1, 2005, http://www.theage.com.au/news/asia-tsunami/tenyear-wait-for-tsunami-aid/2005/02/28/1109546797112.html, [C.Eldoc1.Y00_/01mar05tac1.html]

**[19]** ActionAid International Tsunami Response Finance Summary, January to December 2005, January 1, 2005, http://www.actionaid.org/assets/pdf/ActionAid-Int.responce.pdf [C.Eldoc1.Y00_/01jan05aai1.pdf]

**[20]** Disaster preparedness in the Andaman and Nicobar Islands by Action Aid, Tsunami.actionaid.org.uk, http://tsunami.actionaid.org.uk/projects/i12.htm [C.Eldoc1/Y00_/TS1_Disaster_Preparedness_Andaman_Nicobar_Islands.html]

**[21]** ActionAid International Tsunami Response Finance Summary December 06
Revised Plans for 2005 - 2007 with 2005 actual expenditure 2006 budget and expenditure, December 1, 2006 http://www.actionaid.org/assets/pdf/FinanceSummary.pdf, [C.Eldoc1.Y00_/01dec06aai1.pdf]

**[22]** Tsunami Aid or Debt ancellation! by Damien Millet, Eric Toussaint and others, Vikas Adhyayan Kendra & CADTM, Mumbai, 2005 [B.Y00.M60]


## Other Resources

Tsunami; The Hit and the Affected - A Report of the Study on "Vulnerabilities and Livelihood Security options of the non-ocean fishing communities affected by Tsunami in Tamil Nadu" by M Louis, People's Watch - Tamil Nadu, June-August 2005

Caste Out, A film on discrimination of dalits in the aftermath of Tsunami dir. by Gopal Menon [L.Y00.V893]

The Hit and the Affected: Social Rights of Tsunami Victims - An interview with Henri Tiphagne, 36mins 19secs, produced by CED for Reconstruction for Development Centres(RDC) [L.Y00.VB03]

Twice Evicted, A film on the eviction of Fisherfolk in the aftermath of Tsunami, dir. by Gopal Menon 31 mins [L.Y00.V915]

# கழிவு சுகாதாரம்




**Let's clean up this mess**
A film on the unique efforts of a women's SHG in Trichy and enthusiasm of the children of a school in Cuddalore, which have led to a huge relief to their toilet needs.




**What song shall sing today?**
A film on the plight of the tsunami affected people living in temporary shelters and the miserable state of sanitation and water facilities in the permanent settlements.





**Shanthi Century Not Out**
A film on a striking example of community awareness efforts by Shanthi, which led to the construction of 200 Ecosan toilets in a tsunami affected village.




**Waste or Resource?**
A backgrounder on Sanitation post-tsunami

# மறுசீரமைப்பு




**Veerabagupathy**
A Community in Transition- A film on the reconstrcution process in a tsunami affected village, Veerabagupathy- social, economic and technological hurdles faced.




**Challenges to Change**
A comic on the reconstruction process using the debris from the buildings destroyed in a disaster.


**POSTERS**







# தேசிய கிராமப்புற வேலை வாய்ப்பு உத்திரவாதச் சட்டம்




**Rebuilding Our Lives**
A Backgrounder on the right to work in the context of Post Tsunami Reconstruction

**POSTERS**










# வாழ்வாதாரம்




**Fishing in Troubled Waters**
A backgrounder on the livelihood of the traditional fishing communities







**Net-working Together**
A companion volume and a film on livelihoods of the coastal communities and their fight against the global market hegemony.


# கடலோர மேலாண்மை சட்டம்




**Our Coast Our Right**
A film explaining the CRZ, and the Economics and Politics of its Implementation from the point of view of local community rights.

**POSTER**



**Our Coast Our Right**
A backgrounder on CRZ and Tsunami

**Reconstruction for Development Centres**
Under the RDC programme, Centre for Education and Documentation has created an information hub of information relating to Disaster and Habitat. Besides Backgrounders like these, we have made some films, posters, and other educational material. Our partners, Architecture & Development have also brought out several educational kits. For over two years, CED has been sending monthly compilations of clippings, backgrounders and audio-visuals to all Village Information Centres and NGOs working in the Tsunami areas of Tamil Nadu. We urge you to use these facilities.

**முக்கிய குறிப்பு**

இந்தப் படிவத்தின் நோக்கம், மேற்கொண்டு படிக்கவும், விவாதிக்கவும் வழிவகை செய்வதே. இது, உங்களின் சொந்த ஆய்விற்காக தொகுக்கப்பட்டதேயன்றி வியாபாரத்திற்காக உபயோகப்படுத்தப்பட அல்ல. இப்படிவத்தின் பல பாகங்களை, சொந்த உபயோகத்திற்காகவும், வழிகாட்டியாகவும், உள்ளூர் தேவைகளுக்காகவும் உபயோகிக்க நகல் எடுக்கலாம். மூலப்படிவங்களின் உரிமை அந்தந்த ஆசிரியர்களையும் பதிப்பாளர்களையும் சாரும்.

3 Suleman Chambers, 4 Battery Street
Mumbai - 400 001
Ph: 2202 0019 Email: cedbom@doccentre.net

CED
www.doccentre.net

Plot 7, 8th Main, Domlur 2nd Stage, IIIrd Phase
Bangalore-560 071
Ph: 2535 3397 Email: cedban@doccentre.net